27.07.2023
அசல் வழக்கு எண்: 77/2014

பி.வா.சா.2 சாட்சி நாகராஜன் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

பி.வா.சா.ஆ.5 என்பது எனது கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். எனக்கு கிரையம் கொடுத்த நபர் யாரிடமிருந்து கிரையம் வாங்கினார் என்ற விபரம் பி.வா.சா.ஆ. 5 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 5 ஆவணத்தில் கண்ட வீரணன் வகையறா என்பது முத்து என்பவருடைய வாரிகள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. முத்தையாபிள்ளை கிரையம் வாங்கிய மூல பத்திரத்தை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை. பி.வா.சா.ஆ. 5 ஆவணத்தில் கண்ட சொத்து விபரத்தில் கண்ட கரடிபட்டி கிராமம், ரீசர்வே எண். 18B/1B செண்டு 59 ல் கடைசி 8 1/2 செண்டில் 1 பகுதி 1760 ச.அடி உள்ள வீட்டடி மனையைத்தான் நான் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் கண்ட சொத்தானது மேற்படி 59 செண்டில் கட்டுப்பட்ட சொத்துதான் என்றால் சரிதான்.

தாவா சொத்தை அளக்கவேண்டும் என்று மனு தாக்கல் செய்து நீதிமன்ற ஆணையர் நியமணம் செய்து அவர் தாவா சொத்தை அளந்தார் என்றால் வாதிகள் பெயரில் தாவா சொத்து இல்லை என்று அளக்கவில்லை. ஆணையர் மற்றும் நில அளவையர் தாவா சொத்தை அளந்து தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடங்கள் நீ.மா.சா.ஆ. 1 முதல் 4 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நில அளவையர் தனது அறிக்கையில் சர்வே எண். 18B/1B யில் தற்போது 0.58 ஏர்ஸ் இல்லை என்றும் தற்போது பூமியில் உள்ள நிலவரப்படி சர்வே எண்.

18B/1B1ல் 0.19.58 ஏர்ஸ் வீரணன் வகையறா பெயரிலும் சர்வே எண். 18B/1B2 ல் 0.01.00 ஏர்ஸ் அமுதவள்ளி பெயரிலும் சர்வே எண். 18B/1B3 ல் 0.01.00 ஏர்ஸ் ஜெயபால் பெயரிலும் உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி 3 உட்பிரிவுகளும் சேர்ந்ததுதான் 53 செண்டு நிலம் என்றால் சரியல்ல. மொத்தமுள்ள 59 செண்டில் நான் கிரையம் வாங்கிய 6 செண்டு போக மீதமுள்ள 53 செண்டு நிலம்தான் நில அளவையர் அறிக்கையில் உள்ள சொத்து என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

நான் கிரையம் வாங்கிய 6 செண்டில் 3 செண்டை நான் வெள்ளையம்மாள் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய சொத்தில் கட்டுமானங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். கம்பி வேலி அமைத்துள்ளேன். தாவா சொத்தை நான் அனுபவம் செய்து வருகிறேன் என்பதற்கு காலிமனை ரசீது எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சர்வே எண். 18B/1ல் கண்ட 57 செண்டு வாதிக்கு பாத்தியப்பட்டது என்றாலும் மீதமுள்ள சொத்துதான் எனக்கு பாத்தியப்பட்டது என்றாலும் நான் வீண் வியாஜியம் செய்து வருகிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி 57 செண்டு தற்போது வரை பட்டா எண். 408 ல் வாதிகளின் முன்னோர்களான வீரணன் வகையறா பெயரில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

நான் கிரையம் வாங்கிய பிறகு தாவா சொத்திற்கு பட்டா எதுவும் மாற்றப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 5 ஆவணத்தில் வாதிகளும் 9 முதல் 13 பிரதிவாதிகளும் கையொப்பம் செய்யவில்லை என்றால் கையொப்பம் செய்யவில்லை. ஆனால் நாகலிங்கம் என்பவரை மைனராக கட்டுப்படுத்தி அவரது தந்தை கையொப்பம் செய்துள்ளார். தாவா சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கேட்பதற்கு வாதிகளும் 9 முதல்

13 பிரதிவாதிகளுக்கும் உரிமையுள்ளது என்றாலும் அதை கேள்வி கேட்பதற்கு உரிமை இல்லை என்றாலும் சரியல்ல.